# வேல் மாறல் மஹா மந்திரம்

*வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் தொகுத்தருளியது*

*__விநாயகர் வணக்கம் (கந்தர் அனுபூதி)__*
*நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்*
*தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்*
*செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே*
*பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்*

*__முருகன் பெருமை (அலங்கரம்)__*
*விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா*
*மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த*
*பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி*
*வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே*

*__மயிலின் திறம் (கந்தர் அலங்கரம்)__*
*தடம் கொற்ற வேள் மயிலே! இடர்தீரத் தனிவிடில் நீ*
*வடக்கில் கிரிக்கு அப்புறத்து நின்தோகையின் வட்டம் இட்டுக்*
*கடலுக்கு அப்புறத்தும் கதிர்க்கு அப்புறத்தும் கனகசக்ரத்*
*திடர்க்கு அப்புறத்தும் திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே*

## <u>வேல் மாறல் மஹா மந்திரம்</u>

*வேலும் மயிலும் துணை (6 முறை ஓதவும்)*

*திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன்என(து) உளத்தில்உறை*
*கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.*

*(இந்த அடியை முதலில் 20 முறை ஓதவும்)*

*1. பருத்த முலை சிறுத்த இடை வெளுத்தநகை கறுத்தகுழல்*
*சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்...*

*2. திருத்தணியில் உதித்(து)தருளும் ஒருத்தன்மலை விருத்தம் என(து)*
*உளத்தில்உறை கருத்தன் மயில் நடத்துகுகன்வேலே.*

*திருத்தணியில்...*

*3. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை அறுத்(து)எறிய உறுக்கிஎழு(ம்) அறத்தை நிலை காணும்.*

*திருத்தணியில்...*

*4. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி படைத்தவிறல் படைத்த இறை கழற்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்...*

*5. பனைக்கைமுக படக்கரட மதத்தவன கசக்கடவுள் பதத்(து) இடு(ம்) நி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும்.*

*திருத்தணியில்...*

*6. சினத்(து) அவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத்தலைகள் சிரித்(து)எயிறு கடித்துவிழி விழித்(து) அலற மோதும்.*

*திருத்தணியில்...*

*7. துதிக்கும் அடியவர்க்(கு) ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர் குலத்தைமுதல் அறக்களையும் எனக்(கு) ஓர்துணை ஆகும்.*

*திருத்தணியில்...*

*8. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின் உணவழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்க வளை(வு) ஆகும்.*

*திருத்தணியில்...*

*9. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன் இசைக்(கு)உருகி வரக்குகையை இடித்துவழி காணும்.*

*திருத்தணியில்...*

*10. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்துசிறை முளைத்த(து)என*

*முகட்டினிடை பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும்.*

*திருத்தணியில்...*

*11. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி ஒளிப்பஅலை*
*அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும்.*

*திருத்தணியில்...*

*12. தனித்துவழி நடக்கும் என(து) இடத்தும் ஒரு வலத்தும் இரு*
*புறத்தும் அரு(கு)அடுத்(து)இரவு பகற்றுணைய(து)ஆகும்.*

*திருத்தணியில்...*

*13. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல் ஒழித்(து)அவுணர்*
*உரத்(து) உதிர நிணத்தசைகள் புசிக்க அருள்நேரும்.*

*திருத்தணியில்...*

*14. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்(து) உடையும்*
*உடைப்(பு)அடைய அடைத்(து) உதிரம் நிறைத்து விளையாடும்.*

*திருத்தணியில்...*

*15. சூரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி*
*தனக்கும்நரர் தமக்கும் உறும் இடுக்கண்வினை சாடும்.*
*திருத்தணியில்...*

*16. சலத்துவரும் அரக்கர் உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்*
*சிவத்த தொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும்.*

*திருத்தணியில்...*

*17. சூரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி*
*தனக்கும்நரர் தமக்கும் உறும் இடுக்கண்வினை சாடும்.*

*திருத்தணியில்...*

*18. சலத்துவரும் அரக்கர் உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்த தொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும்.*

*திருத்தணியில்...*

*19. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல் ஒழித்(து)அவுணர்
உரத்(து) உதிர நிணத்தசைகள் புசிக்க அருள்நேரும்*

*திருத்தணியில்...*

*20. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்(து) உடையும்
உடைப்(பு)அடைய அடைத்(து) உதிரம் நிறைத்து விளையாடும்.*

*திருத்தணியில்...*

*21. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும்.*

*திருத்தணியில்...*

*22. தனித்துவழி நடக்கும் என(து) இடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அரு(கு)அடுத்(து)இரவு பகற்றுணைய(து)ஆகும்.*

*திருத்தணியில்...*

*23. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்(கு)உருகி வரக்குகையை இடித்துவழி காணும்*

*திருத்தணியில்...*

*24. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்துசிறை முளைத்த(து)என
முகட்டினிடை பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும்*

*திருத்தணியில்...*

*25. துதிக்கும் அடியவர்க்(கு) ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்(கு) ஓர்துணை ஆகும்*

*திருத்தணியில்...*

*26. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின் உணவழைப்ப(து) என*
*மலர்க்கமலத கரத்தின்முனை விதிர்க்க வளை(வு) ஆகும்*

*திருத்தணியில்...*

*27. பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்*
*பதத்(து) இடு(ம்) நி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும்.*

*திருத்தணியில்...*

*28. சினத்(து) அவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத்தலைகள்*
*சிரித்(து)எயிறு கடித்துவிழி விழித்(து) அலற மோதும்.*

*திருத்தணியில்...*

*29. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை*
*அறுத்(து)எறிய உறுக்கிஎழு(ம்)மறத்தை நிலை காணும்.*

*திருத்தணியில்...*

*30. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி*
*படைத்தவிறல் படைத்த இறை கழற்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்...*

*31. பருத்த முலை சிறுத்த இடை வெளுத்தநகை கறுத்தகுழல்*
*சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்...*

*32. திருத்தணியில் உதித்(து)தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என(து)*
*உளத்தில்உறை கருத்தன் மயில் நடத்துகுகன்வேலே.*

*திருத்தணியில்...*

*33. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி*

*படைத்தவிறல் படைத்த இறை கழற்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்*...

*34. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை*
*அறுத்(து)எறிய உறுக்கிஎழு(ம்) அறத்தை நிலை காண்டும்.*

*திருத்தணியில்*...

*35. திருத்தணியில் உதித்(து)தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என(து)*
*உளத்தில்உறை கருத்தன் மயில் நடத்துகுகன்வேலே.*

*திருத்தணியில்*...

*36. பருத்த முலை சிறுத்த இடை வெளுத்தநகை கறுத்தகுழல்*
*சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்*...

*37. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின் உணவழைப்ப(து) என*
*மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்க வளை(வு) ஆகும்.*

*திருத்தணியில்*...

*38. துதிக்கும் அடியவர்க்(கு) ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்*
*குலத்தைமுதல் அறக்களையும் எனக்(கு) ஓர்துணை ஆகும்.*

*திருத்தணியில்*...

*39. சினத்(து) அவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத்தலைகள்*
*சிரித்(து)எயிறு கடித்துவிழி விழித்(து) அலற மோதும்.*

*திருத்தணியில்*...

*40. பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்*
*பதத்(து) இடு(ம்)நி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும்.*

*திருத்தணியில்*...

*41. தனித்துவழி நடக்கும் என(து) இடத்தும் ஒரு வலத்தும் இரு புறத்தும் அரு(கு)அடுத்(து)இரவு பகற்றுணைய(து)ஆகும்.*

*திருத்தணியில்...*

*42. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி ஒளிப்ப அலை அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும்.*

*திருத்தணியில்...*

*43. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்த(து)என முகட்டினிடை பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும்.*

*திருத்தணியில்...*

*44. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன் இசைக்(கு)உருகி வரைக்குஹையை இடித்துவழி காணும்.*

*திருத்தணியில்...*

*45. சலத்துவரும் அரக்கர் உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர் சிவத்த தொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும்.*

*திருத்தணியில்...*

*46. சூரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி தனக்கும்நரர் தமக்கும் உறும் இடுக்கண்வினை சாடும்.*

*திருத்தணியில்...*

*47. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்(து) உடையும் உடைப்(பு)அடைய அடைத்(து) உதிரம் நிறைத்து விளையாடும்.*

*திருத்தணியில்...*

*48. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல் ஒழித்(து)அவுணர் உரத்(து) உதிர நிணத்தசைகள் புசிக்க அருள்நேரும்.*

*திருத்தணியில்...*

*49. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது குடித்(து) உடையும்
உடைப்(பு)அடைய அடைத்(து) உதிரம் நிறைத்து விளையாடும்.*

*திருத்தணியில்...*

*50. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல் ஒழித்(து)அவுணர்
உரத்(து) உதிர நிணத்தசைகள் புசிக்க அருள்நேரும்.*

*திருத்தணியில்...*

*51. சலத்துவரும் அரக்கர் உடல் கொழுத்துவளர் பெருத்தகுடர்
சிவத்த தொடை எனச்சிகையில் விருப்பமொடு சூடும்.*

*திருத்தணியில்...*

*52. சூரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்) மக பதிக்கும் விதி தனக்கும் அரி
தனக்கும்நரர் தமக்கும் உறும் இடுக்கண்வினை சாடும்.*

*திருத்தணியில்...*

*53. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை முளைத்த(து)என
முகட்டினிடை பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும்.*

*திருத்தணியில்...*

*54. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும் ஒரு கவிப்புலவன்
இசைக்(கு)உருகி வரைக்குகைஹையை இடித்துவழி காணும்.*

*திருத்தணியில்...*

*55. தனித்துவழி நடக்கும் என(து) இடத்தும் ஒரு வலத்தும் இரு
புறத்தும் அரு(கு)அடுத்(து)இரவு பகற்றுணைய(து)ஆகும்.*

*திருத்தணியில்...*

*56. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி ஒளிப்பஅலை
அடக்குதழல் ஒளிப்பஒளிர் ஒளிப்பிரபை வீசும்.*

*திருத்தணியில்...*

*57. சினத்(து) அவுணர் எதிர்த்தரண களத்தில் வெகு குறைத்தலைகள்
சிரித்(து)எயிறு கடித்துவிழி விழித்(து) அலற மோதும்.*

*திருத்தணியில்...*

*58. பனைக்கைமுக படக்கரட மதத்தவள கசக்கடவுள்
பதத்(து) இடு(ம்) நி களத்துமுளை தெறிக்கவரம் ஆகும்.*

*திருத்தணியில்...*

*59. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின் உணவழைப்ப(து) என
மலர்க்கமல கரத்தின்முனை விதிர்க்க வளை(வு) ஆகும்.*

*திருத்தணியில்...*

*60. துதிக்கும் அடியவர்க்(கு) ஒருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்
குலத்தைமுதல் அறக்களையும் எனக்(கு) ஓர்துணை ஆகும்.*

*திருத்தணியில்..*

*61. திருத்தணியில் உதித்(து)தருளும் ஒருத்தன்மலை விருத்தன் என(து)
உளத்தில்உறை கருத்தன் மயில் நடத்துகுகன்வேலே.*

*திருத்தணியில்...*

*62. பருத்த முலை சிறுத்த இடை வெளுத்தநகை கறுத்தகுழல்
சிவத்த இதழ் மறச்சிறுமி விழிக்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்...*

*63. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி தரித்தமுடி
படைத்தவிறல் படைத்த இறை கழற்குநிகர் ஆகும்.*

*திருத்தணியில்*...

*64. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை அடுத்தபகை அறுத்(து)எறிய உறுக்கிஎழு(ம்) மறத்தைநிலை காணும்.*

*திருத்தணியில்*...

*திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை*
*விருத்தன்என(து) உளத்தில்உறை*
*கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.*

*(இந்த அடியை 20 முறை ஓதவும்)*

*தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்*
*கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்*
*நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்*
*பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.*

*வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி*
*குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்*
*தொளைத்தவேல் உண்டே துணை.*

**வேலும் மயிலும் துணை**

*(6 முறை ஓதவும்)*

